DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL.

Calendar }
Miscellaneous } C.C.No.278/2019
Preliminary Register }
Sessions }

{ Prosecution
Deposition of witness for{ Defence PW.1
{ Court

Name : செல்வ ஜெயந்தி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.12.2021.

முதல் விசாரணை

நான் தற்போது புதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். கம்பியூட்டர் ஆப்ரேட்டர் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி என் கணவர். எனக்கும் எதிரிக்கும் 2006 இல் திருமணம் நடைபெற்றது. திருமண ஏற்பட்டின் போது எதிரியின் வீட்டில் இருந்து பெண்பார்க்க வந்தார்கள். 2 நாள்கள் கழித்து எதிரியின் அம்மா எங்கள் வீட்டிற்கு வந்தார். எதிரியின் அம்மா எதிரி மாதம் ரூ 20,000 மேல் வருமானம் வருவதாகவும், சொந்தமாக ஆங்கிலம் கோச்சிங் சென்டர், சொந்தமாக தோப்பு மற்றும் இடங்கள் இருப்பதாக தெரிவித்தார். திருமணத்திற்கு 50 சவரன் நகை மற்றும் 2 இலட்சம்

தரவேண்டும் என்று சொன்னார்கள். என் கணவர் வீட்டில் மூத்தவர். அவருடைய தம்பிக்கு முதலிலேயே திருமணம் ஆகிவிட்டது, தம்பியின் மனைவி 50 சவரன் நகை போட்டதால் எங்களையும் போட சொன்னார்கள். எங்கள் வீட்டில் இருந்து 1 இலட்சம் நகை மற்றும் 50 சவரன் நகை போடுவதாக ஒத்துக்கொண்டோம். நிச்சயதார்த்தம் 28.06.2006 அன்று எங்கள் வீட்டில் இருந்து 4 பேர் சென்று 1 இலட்சம் பணம் மற்றும் 5 பவுன் தங்க செயின் கொடுத்து நடைபெற்றது. 14.07.2006 தேதி காரங்காடு சர்ச்சில் வைத்து திருமணம் நடைபெற்றது. சர்சில் வைத்து 43 1/2 சவரன் நகையும், மேலும் அன்று மாலை எதிரி, எதிரியின் தம்பி மற்றும் எதிரியின் அக்காவிற்கு வீதம் 1/2 வீதம் 1 1/2 பவுன் கொடுத்தோம். திருமணத்தின் போது பரிசாக என் உறவினர்கள் 2 சவரனுக்கு மேல் நகை போட்டார்கள். திருமணத்தின் பிறகு நான் எதிரியின் தம்பியின் வீட்டில் தங்கியிருந்தேன். நான் எதிரியின் வீடு என்று நினைத்திருந்தேன். திருமணம் நடந்த மறுநாள் எதிரியின் அம்மா பார்த்துவிட்டு சிறய மருமகள் கொண்டுவந்த அளவிற்கு நீ கொண்டுவரவில்லை, எதுவும் சரியாக இல்லை என்று கூறினார். அப்போது தான் எதிரி தான் தங்கியிருந்த வீடு தம்பியின் வீடு என்று தெரிவித்தார். திருமணத்தின் போது வீடு, ஏம்.ஏ படித்திருப்பது, தோப்பு எல்லாம் பொய் என்று அப்போது தான் தெரிந்தது. திருமணம் நடந்து 3 வது நாள் நானும் எதீரியும் சர்ச்சக்கு சென்றோம், அங்கு மாஸ்க் முடிந்து அவர் திருப்பி விட்டார், நான்திரும்ப வந்துகேட்டபோது உன் பல் சரியில்லை, கட்டையாக இருக்கிறாய், நான் காதலித்த பெண் போல் இல்லை என்றும் தெரிவித்தார். தான் திருணம் செய்ய விரும்பவில்லை பெற்றோகர்கள் சொன்னதால் செய்யதாக சொன்னார். மேற்சொன்ன விவரத்தை நான் என் அம்மாவிடம் சொன்னேன், இதை பெரிது படுத்தவேண்டாம் சரியாகிவிடும் என்று தெரிவித்தார். எதிரியின் தம்பி எப்போதும் குடித்துவிட்டு பிரச்சனை செய்வார், என்னையும் சேர்த்து திட்டுவார். எதிரியின் வீட்டில் எதிரியின் அம்மா திருமணம் நிச்சயிக்கப்ட்டபோதே அதற்காக தான் ரூ 2 இலட்சம் கேட்டோம் என்றும் மீதம் உள்ள 1 இலட்சம் வாங்கிவர சொன்னார், நான் அதற்கு நிறைய

கடன் வாங்கி தான் திருமணம் செய்து கொடுத்ததாக சொன்னேன். என்னிடம் எதிரி வீடு கட்ட நகை அடகு வைக்கவேண்டும் என்று தெரிவித்தார், 4 காப்புகளை கொண்டு சென்று அடகு வைத்து வீடுவேலை தொடங்கினார். மேலும் வீட்டு வேலை முடிக்க திருமப்பவும் பணம் கேட்டார், நகைகளை விற்றுவிடலாம் என்று சொன்னபோது நான் விற்க முடியாது என்றறேன். ஸ்ட்டேட் பேங்க் ஆப் இந்தியா, திருவிதாங்கூர் கிளையில் கணக்கு தொடங்கி என் பெயரில் நகை அடகு வைதது பணம் பெற்று வீடு கட்டினார்கள். வீட்டு வேலை முடீத்து பால் காய்ச்சசும்போதும் பாத்திரங்கள் கொடுத்தார்கள். எதிரி எந்த சம்பாத்தியம் இல்லாமல் நிறைய பணம் வருவதாக சொல்லி என்னை ஏமாற்றி திருமணம செய்து கொண்டார். 1, 2 நபர்களுக்கு தான் டியூசன் வைத்து அதுவும் ஏப்ரல் மே மாதம் நடத்துவார். வீட்டின் செலவிற்கு எந்த பணமும் எதிரி தருவதில்லை. மேலும் என்னுடைய நகைகளை என் பெயரில் அடகு வைக்க சொல்லுவார், அவரின் பெயரில் நகை அடகு வைத்தால் கை நடுங்கும் என்றும் சொல்லி என்னை வைக்கசொல்லுவார். மேலும் எதிரி பல் சரியில்லை, வண்ணமாக இருக்கிறாய், கட்டையாக இருக்கிறாய் என்று சொல்லி என்னை வீட்டிற்கு அனுப்பி விட்டார். இவ்வாறு செல்ல 2008 வருடம்குமாரகோவில் தரணி கம்பியூட்டார் சென்டருக்குவேலைக்கு சென்றறேன். ஏன் இவ்வளவு நேரமானது யாருடன் படுக்க சென்றாய் என்று சொல்லி சந்தேகப்படுவார். மேலும் திருமண வாழ்கையில் என் பெயரை நியூமராலஜி படி மாற்ற சொல்லி கொடுமைபடுத்தினார், டியூசன் சென்டர் பாத்ரூம் வாஸ்துபடி இல்லை என்று இடித்துவிட்டார். இடிந்த பாத்ரூமை கட்ட உன் வீட்டில் பணம் வாங்கி கட்டுமாறு சொன்னார்கள். நான் முடியாது என்று தெரிவித்தேன், ஆகவே எங்கள் வீட்டில் இருந்து போட்ட எதீரிக்குபோட்ட 5 சவரன் செயின், 2 காப்புகள் 10 சவரன் என மொத்தம் 15 சவரன் கொடுத்தேன். மேலும் வீட்டில் டாங்க் கட்ட பணம் தேவைபடுவதாக சொல்லி பணம் கேட்டார் அதை கடன் வாங்கி கட்டினார். நான் கருவுற்றிருந்தேன், நான் குண்டாகிவிடுவேன் என்பதற்காக எதுவும் சாப்பிட வாங்கி தரவில்லை. நான் கருவுற்றிருந்தபோது எந்த பொருளும் வாங்கி

தந்ததில்லை. வளைகாப்பிற்கு எனக்கு போட்ட நகைகள் பாதிக்கு மேல் விற்று விட்டார்கள், பாதி அடகு வைத்திருந்தார்கள் என் வீட்டில் இருந்து வளைகாப்பிற்கு மீட்டு நகையை கொடுத்தார்கள். 10.5.2009 தேதி எங்களுக்கு பெண் குழந்தை பிறந்தது. பிள்ளைக்கு எங்கள் வீட்டினர் 5 சவரன் நகை போட்டார்கள். நீ வெயிட் போட்டுவிட்டாய் என்று என்னை அன்றே திட்டி அவர் துணிகளை எடுத்துக்கொண்டு வில்லுக்குறியில் தனியாக சென்றுவிட்டார். நகையை அடகு வைத்து பைக் வாங்க சொன்னார், நீ உன் வீட்டில் கேட்டு பைக் வாங்கி வருமாறு தெரிவித்தார். நான் முடியாது என்று சொன்னதால் நகையை அடகு வைத்துகேட்டார். திருநெல்வேலியில் 10 செண்ட் நிலத்தை எங்கள் இருவரின் பெயரிலும் வாங்கினோம். திருமண வாழ்க்கயில் எதிரி எந்த பணமும் சம்பாதிக்கவில்லை, எனக்கு போட்ட நகையை விற்று தான் வாழ்ந்துவந்தோம். டியூசன் முடித்து சீக்கிரமாக வீட்டிற்கு வரசொன்னால் உனக்கு மாப்பிள்ளை வேண்டும் என்றா என்னை கூப்பிடுகிறாய், மாப்பிள்ளை வேண்டுமென்றால் யாருடனாவது போ என்று சொன்னார். இடம் வாங்க பணம் கேட்டார் நகை அடகு வைத்து 5 செண்ட் வாங்க சொன்னார், 14.4.2011 தேதி அந்த 5 செண்ட் இடத்தை என்னுடைய பெயரில் வாங்குவதாக சொல்லிவிட்டு அவர் பெயரிலேயே வாங்கிவிட்டார். நீயும் குழந்தையும் தனியாக இருந்து கொள்ளுங்கள் நான் தனியாக இருந்து புக் எழுதபோகிறேன் என்று சொன்னார். புக் பப்ளிஸ செய்ய என்னுடைய 6 பவுன் நகையை எதிரியின் பெயரில் அடகு வைத்தார். 12.01.2012 தேதி எனக்கு வழக்கறிவிப்பு அனுப்பினார், அதில் நான் சந்தேகபடுவதால் வாழ பிடிக்கவில்லை என்று அனுப்பியிருந்தார். எனக்கு பெண்பிள்ளை இருந்ததால் நான் அனைத்தையும் பொறுத்துகொண்டு எதிரியிடம் சேர்ந்து இருந்தேன். செலவிற்கு பணம் கேட்டால் நீ யாருடனாவது போ என்று சொன்னார். நீ பணம் கேட்டால் நான் ஈஷா யோகா சென்றுவிடுவேன் என்று மிரட்டினார். நான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். போலீசார் சமாதானம் பேசி அனுப்பி வைத்தார். நான் என் அம்மாவிடம் பணம் வாங்கி தான் சாப்பிட்டு

வந்தேன். நீ என் வீட்டில் இருந்து விடடு என்னைபற்றி புகார் கொடுப்பாய என்று சொல்லி பியூஸ் மற்றும் கேட் சாவி எடுத்து போய்விடடார். 2,3 நாள்களாக கேட் சாவி இல்லை, நான் போன் செய்த போது அவர் எடுக்கவே இல்லை. உன்னிடம் இப்போது நகை இல்லை அதனால் நீ எனக்கு வேண்டாம் நீ போய்விடு என்று சொன்னார். பின்னர் என் வீட்டில் வந்து என்னை அழைதது சென்றார்கள். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 156(3) மனு என்னால் கொடுக்கபட்டது தான். அது அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை...</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.